[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 25

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 253 வது விதியின் கீழ், 1985-86 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) குழுக்களுக்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி), பொதுக் கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி), உரிமைக் குழு (பிரிவிலேஜ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.